அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:295/2015

தேதி:16.12.2015

# ஜல்லிக்கட்டு
# வேண்டாம் என்பவர்கள்
# தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு எதிரானவர்கள்
# மத்திய அரசு துணிந்து முடிவு எடுக்க வேண்டும்
## ச.ம.க நிறுவனர் - தலைவர் ஆர்.சரத்குமார் MLA அறிக்கை

ஜல்லிக்கட்டு தமிழர்களின் பாரம்பரிய வரலாற்றோடு இணைந்த ஒரு வீர விளையாட்டு என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஜல்லிக்கட்டை தடை செய்ய வேண்டும் என்பவர்கள் முதலில் ஜல்லிக்கட்டு நடக்கும் இடங்களுக்கு நேரில் வர வேண்டும். அவர்கள் கற்பனையில் நினைக்கின்ற படி காளை மாடுகள் துன்புறுத்தப்படுகின்றனவா? கொடுமைகளுக்கு ஆளாகிறதா? அவைகளுக்கு போதைப் பொருள்கள் கொடுக்கப்படுகிறதா? கண்களில் மிளகாய்ப் பொடி தூவப்படுகிறதா? என்பதை நேரில் வந்து பார்க்க வேண்டும்.

ஏ.சி. வசதி செய்யப்பட்ட கார்களிலும், அறைகளிலும் இருந்து கொண்டு கலாச்சார மரபுகளைப் பற்றி கொஞ்சமும் அறியாதவர்கள், தன் வீரத்தைப் பறைசாற்ற மாடு பிடி களத்தில் இறங்கி வீர விளையாட்டில் ஈடுபடும் தமிழக இளைஞர்களின் உணர்வை புரிந்து கொள்ள முடியாது.

பல கோடி தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு தமிழக அரசும், மத்திய அரசும் தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு நடத்திட திட்டம் தீட்டுகிற நிலையில், சிலர் தங்களைப் பிரபலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக ஜல்லிக்கட்டை நடத்த விடாமல் தடுக்க வேண்டும் என்கிறார்கள்.

காளைமாடுகளும், வீர தமிழ் இளைஞர்களும் வீரத்தின் சின்னங்கள். மற்ற மாடுகள் போல் காளை மாடுகள் வண்டி இழுக்கவோ, உழவுப் பணிகளுக்கோ பயன்படுத்தப்படுவதில்லை. அவை மாடுகளின் இனப்பெருக்கத்திற்கும் பண்டிகை கால வீர விளையாட்டிற்கும் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிலும் காளை மாடுகளை தங்கள் செல்லப் பிள்ளைகளைப் போலவே பாதுகாத்து வளர்த்து பேணி காத்து வருகின்றனர். காளை மாடு வைத்திருப்பவருக்கு கிராமப்பகுதிகளில் இன்றும் ஒரு மரியாதை இருக்கிறது.

கிரிக்கெட், சினிமா பிரபலங்கள் ஜல்லிக்கட்டை எந்த நோக்கத்திற்காக எதிர்க்கிறார்களோ அதில் துளி கூட உண்மை இல்லை என்பதே இன்றைய நிலை.

பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 28 நாள்களே உள்ள நிலையில், மத்திய அரசு உடனடியாக சட்டத்திருத்தத்தை ஏற்படுத்தி அறிவித்தால் தான் கிராமங்களில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கான பணிகளைத் தொடங்க முடியும். ஜல்லிக்கட்டுக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவிப்பவர்கள் உண்மையான தமிழின உணர்வுக்கு எதிரானவர்கள், அவர்களால் மக்களுக்கு எந்த ஒரு நன்மையும் விளையப் போவதில்லை. பொழுது போவதற்காக அர்த்தமற்ற அறிக்கைகள் வெளியிட்டு கொண்டிருப்பவர்களை மத்திய அரசு முற்றிலும் புறக்கணிக்க வேண்டும். மேலும் காலந்தாழ்த்தாமல் நல்ல முடிவை அறிவிக்க வேண்டும்.

# பா.ஜ.க கொள்கை

இந்தியாவில் ஜல்லிக்கட்டு போன்ற பாரம்பரிய விளையாட்டுகளை காப்பது பாரதிய ஜனதா கட்சியின் கொள்கை என்று மத்திய அமைச்சர் பல்வேறு முறை தொடர்ந்து சொல்லி வருகிறார். எனவே இந்த ஆண்டு தைத் திருநாளில் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு பா.ஜ.க அரசு முழு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்